மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 439, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

439—

பாம்புகளைப் பிடித்து மனித உயிர்களைப் பாதுகாக்க நடவடிக்கை.

*1532 திரு. ஜி. பழனிசாமி:

மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சாவூர் மாவட்டத்தில் பாம்பு பிடிப்பது தடை செய்யப்பட்டுள்ளதைத் தளர்த்தி பாம்புகளைப் பிடித்து மனித உயிர்களைப் பாதுகாக்க அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பாம்புகளைப் பிடிப்பதற்காக தடை ஏதும் தஞ்சை மாவட்டத்துக்கென தனியாக இல்லை. அழிந்து வரும் விலங்கினங்களைப் பாதுகாக்கவும், அவற்றைப் பிடித்தல், அவைகளை வணிகம் செய்தல் ஆகியவற்றை முறைப்படுத்த, 1972-ல் மத்திய அரசு நிறைவேற்றிய வன உயிரின பாதுகாப்புச் சட்டம் மாநில முழுமைக்கும் ஒரே சீராகப் பொருந்தும்.

தஞ்சை மாவட்டத்திலிருந்து இதுவரை எந்த தனி நபரிடமிருந்தோ அல்லது நிறுவனங்களிடமிருந்தோ பாம்புகளின் தொல்லை இருப்பதாகவோ, பாம்புகளால் மனித உயிருக்கு ஆபத்து உள்ளதாகவோ புகாரோ அல்லது அவைகளைப் பிடிக்கக் கோரிக்கையோ வரவில்லை. அவ்வாறு வந்தால் அவைகள் உடனுக்குடன் வெகு விரைவில் கவனிக்கப்படும்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை, நாகை—காயிதே மில்லத் மாவட்டங்களிலே இன்றைக்கு விஷமுள்ள பாம்புகள் இருக்கின்றன. பாம்புகளை பிடிக்கக்கூடாது, பாம்புத் தோலை ஏற்றுமதி செய்யக்கூடாது என்று தடை விதித்த பின்னால், பாம்புகள் உற்பத்தி அதிகமாக உள்ளது. சாதாரணமாக கிராமப்புறத்தில் இருக்கக்கூடிய விவசாயத் தொழிலாளர்கள் பல பேர் பாம்புக் கடியினால், உயிரிழந்து இருக்கிறார்கள். அனேகமாக இதிலே நூற்றுக்கணக்கான பேர்கள் இறந்திருக்கிறார்கள். அரசு கொடுக்கக்கூடிய உதவித் தொகை கூட, பிரேத பரிசோதனைக்கு அனுப்பப்பட்டும், அவர்களுக்கு நிவாரணம் கிடைக்காத ஒரு சூழ்நிலை இன்றைய

1992 ஏப்ரல் 2]

தினம் இருக்கிறது. ஆகவே, அரசு இந்தச் சட்டத்தை தளர்த்தி அந்தப் பாம்புகளைப் பிடிப்பதற்கான முயற்சிகளிலே ஈடு படுமா? அமைச்சர் அவர்கள் கோரிக்கை வரவில்லை என்று சொல்கிறார்கள். இதையே கோரிக்கையாக எற்று அந்த நட வடிக்கையிலே இறங்குவாரா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-50

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாம்புகளை நாம் அதிகமாகப் பிடித்தால், வயல்களிலே இருக்கின்ற நெற்களை பாதுகாப்பதற்கு எலிகள் தொல்லைகள் அதிகமாகப் பெருகும். சேமிப்புக் கிடங்கு களில் எலிகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் பாம்புகளே அந்த எலிகளைப் பிடித்துக் கொன்றுவிடுகின்ற காரணத்தால் எலிகளை ஒழிப்பதற்காக பாம்புகளை இன்றைக்கு ஒரளவிற்கு பிடிக்கக்கூடாது என்று மத்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டி ருக்கிற காரணத்தால் இதை நான் குறிப்பிடுகிறேன். மாண்புமிகு உறுப்பினரவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். நம்முடைய தமிழகத்தின் ஒப்பற்ற தலைவியாக இருக்கின்ற மாண்புமிகு முதல்வரவர்கள், தமிழகத்திலே இருக்கின்ற நச்சுப் பாம்புகளை எல்லாம் பிடிக்கின்ற நேரத்தில் (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) இதுபோன்ற பாம்புகளை நீங்கள் குறிப்பிட்டால், பிடிப்ப தற்கு இந்த அரசு என்றைக்கும் தயங்காது என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எலிகளைப் பிடிப்பதற்காக இந்த பாம்புகளை வளர்ப் பதாக அமைச்சரவர்கள் இங்கே அறிவித்தார்கள். உற்பத்தி செய்யக்கூடிய விவசாயத் தொழிலாளர் அழிந்த பின்னர், நாம் இந்த உற்பத்தியை எப்படி எதிர்பார்க்கமுடியும்? ஆகவே நான் அமைச்சருக்கு சொல்லிக் கொள்கிறேன். உண்மையில் இது மிகப் பெரிய சோதனை. இன்றைக்குக் கூட பல பேர் இறந்து போகின்ற அந்த கொடுமையான காட்சிகளை நாம் பார்க்க முடிகிறது. இன்றைக்கு கிராமப்புறங்களில் இருக்கின்ற மக்களுக்குச் சரியான மருத்துவ வசதிகூட கிடைக்கவில்லை. அவர்களைக் கொண்டு வந்து மருத்துவமனையில் சேர்ப்பதற்குள்ளாக பல பேர் இறந்து விடுகிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட சூழ்நிலையில் விரசு பாம்பு களை வளர்க்கின்ற பண்ணைகளின் மூலமாகவாவது அந்தப் பாம்புகளைப் பிடித்துக் கொண்டு வந்து, நீங்கள் அந்த உயிரினங் களை பாதுகாக்க வேண்டுமென்று அங்கேயாவது கொண்டுவந்து விடுங்கள். இது மிகவும் அவசியமானது. (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தஞ்சை மாவட்டத்தில் நிறைய விஷப் பாம்புகள் இருக்கின்றன என்பது எல்லோருக்கும் தெரியும். (சிரிப்பு). (மேசையைத் தட்டும் ஒலி). எனவே

அவற்றை ஒழிப்பதற்குரிய நடவடிக்கைகளும் தீவிரமாக நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன என்று அமைச்சர் சொல்கிறார். நீங்கள் வேறு எதற்காக அதற்கு வக்காலத்து வாங்குகிறீர்கள் ; (சிரிப்பு). மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு ரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் எந்தத் தீங்கும் இழைக்காத தண்ணீர்ப் பாம்புகள்தான் அதிகமாக உண்டே தவிர, அதுவிஷப் பாம்பு இல்லை என்பதைத்தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : நான் சொல்வது நல்ல பாம்புகளை பற்றி. நல்ல பாம்புகளைப் பிடிக்க வேண்டுமென்று சொல்கிறேன். நீங்கள் விஷப் பாம்புகளைப் பிடிப்பது பற்றி ஒன்றுமில்லை. ஆகையால் தான் அந்தப் பாம்புகளைப் பிடித்து, உருப்படியாக அந்த விவசாயத் தொழிலாளிகளின் வாழ்விற்காக அரசு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் அமர்ந்து விட்டார். அமைச்சர் பதில் வேண்டாம். அவர் பதில் கேட்கவில்லை. கேட்டு அமர்கிறேன் என்று சொல்லிவிட்டார். (சிரிப்பு).

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் உற்பத்தி செய்கின்ற உற்பத்தி அளவில் 10 சதவிகிதத்திலிருந்து 15 சதவிகிதம் வரை எலிகளே அவற்றைச் சாப்பிட்டுவிடுகிறது. மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் குறிப்பிட்டபடி நாட்டிலே இன்றைக்கு பற்றாக் குறை இருக்கிறது என்பதும் நமக்கு நன்றாகத் தெரியும். எலி களை பாம்புகளே தின்று விடுகிறது. ஆகவே அந்தத் தொல்லை குறைகின்றது என்கின்ற அடிப்படையில் வன உயிர் பாதுகாப்புச சட்டத்தின் அடிப்படையில் பாம்புகளை இன்றைக்கு கொல்லக் கூடாது என்று மத்திய அரசு தடை விதித்திருக்கின்ற காரணத் தால் அதை நாம் பிடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாமல் இருக்கிறோம். தஞ்சை மாவட்டத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறபோது சிலபேர் பாம்புகளைப் பிடித்து, தெரியாமல் தோலை உரித்து வியாபாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். அது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதை யாரும் தடுக்கமுடிய வில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்ட தைப் போன்று தஞ்சை மாவட்டத்தில் சில விஷப் பாம்புகள் இருக்கின்றன. அவற்றை நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் அடக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதும் உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே நீங்கள் குறிப்பிடுகின்ற இடத்திற்கு உடனடியாக நம்முடைய துறையின் அதிகாரிகளை அனுப்பி ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1992 ஏப்ரல் 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களும், மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்களும், தஞ்சை மாவட்டத்தில் மட்டும் தான் அந்த விஷப் பாம்புகள் இருப்பதாகச் சொன்னார்கள். தமிழகம் பூராவும் அந்த விஷப் பாம்பு கருநாகப் பாம்பு எல்லாம் நடமாடிக் கொண்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், நல்ல பாம்பு போல் நடித்து, நடனம் ஆடியும் கொண்டிருக்கிறது. இதையெல்லாம் உடனடியாகத் தடுத்து நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருநாகப் பாம்பு இப்போது படம் எடுப்பதே இல்லை. படம் எடுக்காமல் தடுத்துவிட்டது இந்த அரசு என்பதையும், ஒப்பற்றத் தலைவியாக இருக்கின்ற புரட்சித் தலைவி அவர்கள் வந்ததற்குப் பிறகு கருநாகப் பாம்பு படம் எடுக்க முடியாத அளவிற்கு அடக்கப்பட்டு விட்டது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 440, திரு. இரா. நடேசன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

440—

விலை உயர்ந்த ஈட்டி, தேக்கு மரங்களை நட்டு வருவாய் பெருக்க நடவடிக்கை.

*3519 திரு. இரா. நடேசன்

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள காடுகளில் மென்மையான மரங்கள் (Soft Wood) நடுவதால் அரசுக்கு பெரும் இழப்பு ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், விலை உயர்ந்த உயர்ரக ஈட்டி, தேக்கு மரங்களை நட்டு வருவாய் பெருக்க அரசு முன்வருமா?